www.tamilarangam.net

கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 027

09 ஒகஸ்ட் 2010

தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# புலம்பெயர் அமைப்புக்களை சிங்கள அரசிடம் கையளிப்பதற்கு தயாராகும் காகிதப்புலிகள்



வெளிநாடுகளில் இயங்கிவரும் தமிழீழ தேசிய அமைப்புக்களை கே.பி யூடாக சிங்கள அரசிடம் கையளிப்ப தற்கு சுதிர் அல்லது சுகி என்றழைக் கப்படும் இராமு.சுபன் தலைமையிலான காகிதப்புலிகள் தயாராகி வருவதாக கறுப்பிற்கு நம்பகமான புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளன.

கடந்த ஆண்டு மே 18இற்குப் பின்னர் புலம்பெயர் தமிழீழ தேசிய அமைப்புக்களை தனது கட்டுப் பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு எடுத்த முயற்சி தோல்வியடைந்த நிலையில், நெடியவன் என்பவரை பெருங்குடிமகன் சர்வேயூடாக பன்னாட்டு புலனாய்வு அமைப்புக்க ளிடம் கே.பி காட்டிக் கொடுத்திருந்தார். இதனை தொடர்ந்து காகிதப்புலி வி(நாய்)யகம் குழுவினரால் நெடியவ னும் அவரது குடும்பத்தினரும் கடுமை யாக மிரட்டப்பட்டிருந்தனர்.

தற்பொழுது மீண்டும் புலம்பெயர் தமிழீழ தேசிய அமைப்புக்களை கே.பியூடாக சிங்கள அரசிடம் கையளிப் பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளில் காகிதப்புலி இராமு.சுபன் ஈடுபட்டு வருகின்றார்.

இதன் முதற்கட்டமாக பிரித்தானிய தமிழர் பேரவையை ஆக்கிரமித்து, சிங்கள அரசின் கைக்கூலி அமைப் பாக அதனை மாற்றுவதற்கு இலண்ட னில் உள்ள தனம் என்றழைக்கப்படும் றூபேர்ட் என்ற காகிதப்புலித் தொழில திபர் முற்படுவதாக தெரிய வருகின்றது. தன்னை ஒரு விடுதலைப்புலி என்று கூறிக்கொள்ளும் தேசத்துரோகி தனம், காகிதப்புலி இராமு.சுபனின் கைக்கூலி யாகவே செயற்பட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் இலண்டனில் உள்ள தேசியசொத்தொன்றை (வீட்டை) தன்னிச்சையாக விற்று அதனை தமிழகத்தில் விநா(ய்)யகம் முதலிட்டுள்ளார். சொத்துக்குரிய சம்பந்தப்பட்ட நபருக்கு கொலை மிரட்டல் விடுத்து இச்செயலை செய்துள்ள விநாயகம், கடந்த ஆறு மாதத்துள் மூன்று தடவை இந்தியா வுக்கு சென்று வந்தமை குறிப் பிடத்தக்கது. விநாயகம், அன்பரசன் மற்றும் சுபன் ஆகியோர் கே.பியின் ஆலோசனையில் இயங்குவது விரைவில் அம்பலமாகும். எனவே தேசிய செயற்பாட்டாளர்களே மிகவும் அவதானமாக இருங்கள். உங்கள் கவனக்குறைவு ஒட்டுமொத்த இனத்தின் அழிவுக்கும் காரணமாக லாம். இவர்களின் தொடர்புகளை விட்டெறியுங்கள். தேசியத்தைக்காட்டி மோசம் செய்யும் கும்பலை மக்கள் மத்தியில் அடையாளப்படுத்துங்கள். இவர்களுக்கான அடையாளத்தை விரைவில் நாம் தருவோம்.



துரோகத்தின் வித்து
விநாயகம் - கதிர்காமத்தம்பி அறிவழகன்

**விரைவில்
இராமு.சுபனின்
படம் வெளிவரும்**

**"கறுப்பு - துரோகங்களின் கருவறுப்பு"**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நரிகேசி உருத்திரகுமாரனின் தூதுக் குழு விரைவில் கொழும்புக்குப் பயணம்?



நாடுகடந்த அரசாங்கத்தின் முடிசூடா மன்னனாக விளங்கும் நரிகேசி உருத்திரகுமாரன், தனது விசுவாசிகளைக் கொண்ட தூதுக் குழு ஒன்றை கொழும்புக்கு அனுப்புவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

காகிதப்புலி இராமு.சுபன், வி(நாய்)யகம் ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய இதற்கான ஏற்பாடுகளில் நரிகேசி உருத்திரகுமாரன் ஈடுபட்டு வருகின்றார். தடுப்பு முகாம்களில் உள்ள போராளிகளை விடுவிப்பது தொடர்பாக சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் நிமித்தமே தனது தூதுக் குழு கொழும்பு செல்ல இருப்பதாக, நாடுகடந்த அரசாங்கத்தின் பிரதிநிதிகள் சிலரிடம் நரிகேசி உருத்திரகுமாரன் கூறியுள்ள பொழுதும், கே.பியின் அறிவுரைக்கு அமைய, தேசத்துரோகிகள் மனோ - சர்வே தரப்பினரின் உதவியுடன் இதற்கான நடவடிக்கைகளில் நரிகேசி உருத்திரகுமாரன் ஈடுபடுவதாக கறுப்பின் புலனாய்வு வட்டாரங்கள் உறுதிசெய்துள்ளன.

இதற்கு முன்னோடியாக கே.பியுடன் நேரடியாகக் கலந்துரையாடும் நிமித்தம் இலண்டனில் இருந்து தனது விசுவாசியான முருகையா ஜெயசங்கர் என்பவரை கொழும்புக்கு நரிகேசி உருத்திரகுமாரன் அனுப்பி வைத்துள்ளார்.

இதற்கிடையில் பிரான்சில் பிரபல வர்த்தகரும் முன்னாள் மாற்றியக்கமொன்றின் பிரான்ஸ் நிதிப்பொறுப்பாளருமாகிய முக்கிய பிரமுகர் ஒருவர் கே.பியை சந்திப்பதற்காக மனோ கொழும்புக்கு அனுப்பி வைத்துள்ளார். இவர் பிரான்சை மையமாக வைத்து புலம்பெயர்மக்களிடம் எவ்வாறு பிரச்சாரம் செய்வது மற்றும் பணம் பறிப்பது தொடர்பாக ஆலோசிக்கப்படவுள்ளது. மனோவை முன்னர் கொழும்புக்கு அழைத்தபோது தானும் 9 பேர் கொண்ட குழுவில் வருவதாக கே.பிக்கு தெரிவித்த போதும் பின்னர் கடவுச்சீட்டு காரணமாக கொழும்பு செல்லமுடியவில்லை.

# அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலியை ஆக்கிரமிப்பதற்கு தேசத்துரோகி தனம் கடும் பிரயத்தனம்

பிரித்தானியாவில் இருந்து ஒலிபரப்பாகும் ஐ.எல்.சி தமிழ் என்றழைக்கப்படும் அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலியை ஆக்கிரமிப்பதற்கான பகீரத பிரயத்தனங்களில் காகிதப்புலித் தொழிலதிபர் தேசத்துரோகி தனம் ஈடுபட்டு வருகின்றார்.

ஜி.ரி.வியின் செய்தி-நிகழ்ச்சிப் பணிப்பாளராக சம்பளம் எடுக்கும் இவர், கே.பியின் உத்தரவுக்கு அமைய தற்பொழுது அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலிக்குள் புகுந்து அதனைக் கையகப்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதாக கறுப்பிற்கு நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன. அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலியின் பணிப்பாளர் பதவியில் இருந்து ஏ.சி.தாசீசியஸ் அவர்களை நீக்கி விட்டு, தனது விசுவாசி ஒருவரை அவ்விடத்திற்கு நியமித்து, வானொலியைக் கைப்பற்றுவதற்கு தேசத்துரோகி தனம் முற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே தனது நண்பரான சத்தி என்ற தொழிலதிபர் ஊடாக ஐ.பி.சி தமிழ் வானொலியை ஆக்கிரமித்திருக்கின்றார் தேசத்துரோகி தனம்.

கே.பி குழுவின் ஆதிக்கத்தில் இருந்து அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலியைக் காப்பாற்றுவதற்கு ஏ.சி.தாசீசியஸ் போன்ற தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் சிலர் முற்படுகின்ற பொழுதும், இதற்கு தனம் பெரும் இடையூறு விளைவிப்பதாக தெரிய வருகின்றது. கே.பி குழுவை சேர்ந்த அன்ரன் பொன்ராசாவின் ஆசானாக ஏ.சி.தாசீசியஸ் அவர்கள் விளங்குகின்ற பொழுதும், சிங்கள அரசுடன் கே.பி இணைந்து கொண்டதையிட்டு ஏ.சீ.தாசீசியஸ் அவர்கள் கடும் அதிருப்தி அடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. ஏற்கனவே 1998ஆம் ஆண்டு ஐ.பி.சி வானொலியை ஏ.சி.தாசீசியசிடம் இருந்து பிடுங்கி கே.பியின் வலதுகையான பெருங்குடிமகன் சர்வேயிடம் கையளித்தமை போன்று, தற்பொழுது அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலியை கே.பியூடாக சிங்கள அரசிடம் தனம் கையளிக்கக்கூடும் என்று, ஏ.சி.தாசீசியஸ் அவர்களிடம் அவரது நெருங்கிய நண்பர் ஒருவர் எச்சரித்துள்ளார்.

இதற்கிடையே, ஏ.சி.தாசீசியஸ் உள்ளடங்கலான தமிழ்த் தேசிய உணர்வாளர்களை சட்டச் சிக்கல்களில் மாட்டிவிடுவதற்கான சதி வேலைகளில் ஈடுபடுமாறு, தனத்திடம் ஜி.ரி.வியின் பணிப்பாளர்களில் ஒருவரான தேசத்துரோகி கிருஸ்ணா ஆலோசனை வழங்கியிருப்பதாக, கறுப்பிற்கு நம்பகமான தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.